# முதல் திருப்புதல் தேர்வு - 2025

☆ **பன்னிரெண்டாம் வகுப்பு** பதிவு எண் : ☐☐☐☐☐☐

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 90

### பகுதி-I

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14 x 1 = 14

1. "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்குதற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்,
   க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது
   உ) பொதிகையில் தோன்றியது
   ங) வள்ளல்களைத் தந்தது
   அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி
   இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி
2. பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.
   அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.
   ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.
   இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.
   ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.
3. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
   அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்
4. தமிழில் திணைப்பாகுபாடு _______ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
   அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு
5. "உவா உற வந்து கூடும்
   உடுபதி, இரவி ஒத்தார்" - யார் யார்?
   அ) சடாயு, இராமன் ஆ) இராமன் , குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி
6. பொருத்துக.
   அ) மாச்சீர் - 1) கருவிளம், கூவிளம்
   ஆ) காய்ச்சீர் - 2) நாள், மலர்
   இ) விளச்சீர் - 3) தேமாங்காய், புளிமாங்காய்
   ஈ) ஓரசைச்சீர் - 4) தேமா, புளிமா
   அ) 1,2,4,3 ஆ) 4,3,1,2 இ) 2,3,1,4 ஈ) 3,4,2,1
7. 'காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்'
   இக்கவிதையில் _______ பயின்று வந்துள்ளது.
   அ) பயன் படிமம் ஆ) வினைப்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்
8. 'விளியறி ஞமலி' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?
   அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாளி
9. வேறுபட்டதைக் குறிப்பிடுக.
   அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
   இ) நடுக் காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு
10. 'சாப விமோசனம்', 'அகலிகை' கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்
    அ) கு. அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன்
    இ) ஜெயமோகன் ஈ) எஸ். இராமகிருஷ்ணன்

www.Padasalai.Net www.TrbTnpsc.com



11. முச்சந்தி இலக்கியம் என்பது
கூற்று 1: கதை வடிவிலான வடிவம் உடையது
கூற்று 2: பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது
அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 1, 2 சரி
இ) கூற்று 1, 2 தவறு ஈ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

12. அல்லல் படுப்பதூஉம் இல் - எவரோடு பழகினால்?
அ) வாள்போல் பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர்
இ) எண்ணியாங்கு எய்துபவர் ஈ) தீயினத்தார்

13. ச. த.சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி.வேங்கடசாமி எழுதியநூல்
அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்
இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்தவமும் தமிழும்

14. கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்
அ) ஆய் அண்டிரனும் அதிகனும் ஆ) நல்லியக் கோடனும் குமணனும்
இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்

பகுதி-2

பிரிவு-1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 x 2 = 6

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
16. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?
17. ஒருமுக எழினி, பொருமுக எழினி - குறிப்பு எழுதுக.
18. கலிவிழா , ஒலிவிழா- விளக்கம் தருக.

பிரிவு-2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக** 2 x 2 = 4

19. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.
20. பருவத்தே பயிர் செய்- நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.
21. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.

பிரிவு-3

**எவையேனும் ஏழனுக்கு விடையளிக்க.** 7 x 2 = 14

22. ***மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.***
தலை , தளை , தழை
23. ***வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.***
ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.
24. ***தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.***
எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது.
25. ***ஏதேனும் ஒன்றனுக்கு சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க***
அ) தாமரை ஆ) கோவில்
26. ***பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.***
தின்மை - திண்மை
27. ***தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.***
வாழைக் காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும்
28. ***ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.***
அ) வானமெல்லாம் ஆ) பூம்பாவாய்

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



29. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) சாய்ப்பான் ஆ) விளங்க

30. பத்தியைப் படித்து தேவையான இடங்களில் நிறுத்தக்குறிகளை இட்டு எழுதுக.
இளங்கோவடிகள் சாத்தனாரிடம் முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே அவர்களுடைய முந்தைய வினை யாது அதன் விளைவு என்ன நிகழ்ந்த காலம் யாது அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக எனக் கேட்டார்.

## பகுதி-3

### பிரிவு-1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

31. 'நெல்லின் நேரே வெண்கல் உப்பு' - இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.
32. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.
33. அறிவுடை வேந்தனின்நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?
34. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.

### பிரிவு-2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக 2 x 4 = 8

35. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.
36. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.
37. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?
38. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் - விளக்கம் எழுதுக.

### பிரிவு-3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 4 = 12

39. அ) ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.
ஆ)அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார்
- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக.
அந்தியருளாற் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான் கண்டேன். திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ?
- பாரதிதாசன்

41. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்துக.
அ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை
(அல்லது)
ஆ)எறும்பு ஊரக்கலலும் தேயும்.

42. அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக .
(அல்லது).
ஆ)செவியறிவுறூஉத் துறையைச் சான்றுடன் விளக்குக.

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



43. *தமிழாக்கம் தருக.*

1. Learning is a treasure that will follow its owner everywhere.
2. A new language is a new life.
3. If you want people to understand you, speak their language.
4. Knowledge of languages is the doorway to wisdom.

43. **காது கேளாதவர்களுக்கான மாற்று வினா.**

***கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக.***

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்றதாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல்.அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மன வளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்,மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே .

*- மொழி வரலாறு (மு. வரதராசனார்)*

பகுதி-4

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 3 x 6 = 18

***(பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.)***

44. அ) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவ்க.

*(அல்லது)*

ஆ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன் , பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக

45. அ) நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

*(அலலது)*

ஆ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

46. ஆ) கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப் பண்புகளை விளக்குக.

*(அல்லது)*

ஆ) சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? - விளக்குக.

பகுதி-5

**அடி மாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4 + 2 = 6

47. அ) "பாதகர்" எனத் தொடங்கும் பாடலை எழுதுக.

ஆ) "அரண்" என முடியும் குறளை எழுதுக.

********

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com